Registered as a NewsPaper in Ceylon ★ விலை: சதம் 15



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றேட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்: 389

WOLSELEY
வூல்சிலி 2"
நீர் இறைக்கும் யந்திரங்கள்
உபகரணங்களுடன்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 ஐப்பசி 8 றமழான் 5 (25—10—7) திங்கட்கிழமை இதழ் 255

## லஞ்சஊழல் சட்டத்தில் புதிய அம்சம்

# சொத்து கிடைத்த விபரம் வெளியிட வேண்டும்

## தவறுகிறவர்கள் தண்டனைக்காளாவர்

கொழும்பு, ஞாயிறு சொத்துக்கள் எப்படிக் கிடைத்தன என்பதுபற்றிய விபரம் தரமுடியாதவர்கள் அனைவரும் லஞ்சஊழல் குற்றத்துக்காளாக வேண்டிய நிலைவரலாம்.

சொத்துவிபரங்களை வெளியிடுவதற்கான புதிய சட்ட விதிகளில் மேற்படி அம்சமும் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகின்றது. 1954, மார்ச்மாதம் முதலாம் திகதிக்குப்பின்னர் தமது வருமானத்துக்கு மேலாக வைத்துள்ள பணம் அல்லது சொத்துபற்றிய சரியான விபரம் தரமுடியாதவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தண்டனைக்குள்ளாவார்கள் இது விஷயமாக தாம் நிரபராதி என்பதை உறுதிப்படுத்துவதும் சம்பந்தப்பட்டவர்களேயே பொறுத்த விஷயமாகும்.

சூதாட்டம் அல்லது குதிரை ரேஸ் போன்றவை மூலம் இவை கிடைத்ததாகச் சொன்னாலும் சட்டம் விடாது. இதற்கான உண்மையான ரசீதுகளை சமர்ப்பிக்காத பட்சத்தில் சட்டத்தின்கீழ் தண்டனைக்குள்ளாக நேரிடும். வேறு யாருடைய சொத்தென்று கூறியும் தப்பமுடியாது. ஏனெனில் அவருக்கு அந்தச் சொத்து எவ்வாறு கிடைத்தது என்பதையும் ஆராய்வதற்கு சட்டம் வழிசெய்கின்றது.

## வடபகுதி ஆசிரியர்களுக்கு சம்பளம் 27-ம் திகதி

யாழ்ப்பாணம், திங்கள் வடபகுதி ஆசிரியர்களின் அக்டோபர் மாதத்திற்கான சம்பளம் இம்மாதம் 27-ம் தேதிதான் வழங்கப்படவிருக்கிறது.

அரசாங்க அச்சகத்தினர் சம்பளம் பதிவேடுகளை அக்டோபர் இரண்டாம் வாரத்திலேயே அனுப்பிவைத்தமையால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய நிதியாண்டுக்கான புதிய பதிவேடுகளைத் தயாரிப்பதும், உழைக்கும் பொழுது செலுத்தும் புதிய இறைவரித் திட்டமும் இந்த தாமதத்தை மேலும் கூட்டிவிட்டன.

ஆசிரியர் நிலை பாதிக்கப்படும் என்பதை உணர்ந்த வடமாநில கல்வித்திணைக்கள ஆலோசனை சபை, சம்பளக்கிளை ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்து அவர்கள் மேலதிக ஊதியம் கேட்காமல் அலுவலகநேரத்திற்கு மேலாக கூடுதலாக வேலைசெய்து இம்மாதம் 26-ம் 27-ம் தேதிகளில் சம்பளம் கிடைக்க வழிசெய்தனர்.

**ஜனவரி 3-ம் தேதி**

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம், திங்கள் கைதடியில் திறவப்படும் ஆயுள்வேதவைத்தியசாலையை அடுத்த ஆண்டு ஜனவரி 13ம் தேதி சுகாதார அமைச்சர் டபிள்யூ. பி. ஜி. ஆரியதாசா திறந்து வைப்பார்.

யாழ்ப்பாண சுதந்திரக்கட்சி இளைஞர் திரு அம்பிகைபாகன் நேற்று இனைய தமது தேவாரப்பிரிவு நேரம்பேசுகின்றார்? யாழ்ப்பாண சுதந்திரக்கட்சி இணைத்தலைவர் திரு அம்பிரத்துரையப்பா மேற்கண்ட தகவலை நேற்று தமது நிருபரிடம் தெரிவித்தார்.

திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் ஆயுள்வேதவைத்தியசாலைக்கு தேவையான உதவிகளை செய்ய தாம்தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண எம். பியாக இருந்தபோது, தான் ஆயுள்வேத வைத்தியத்துறைக்கு பல உதவிகள் செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கல்விப் பிரச்னையை அரசியல் பிரச்னையாக்குகிறார்

### வட. கல்வியதிபருக்கு ஆசிரியசங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள் "கேள்விக் கொத்து பற்றிய விளக்கத்தை ஆசிரியர் மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்ததன் மூலம், கல்விப்பிரச்னையை அரசியல் பிரச்னையாக மாற்ற முயற்சிக்கும் வடமாநிலக்கல்வி அதிபரின் செயலை இச்சங்கம் வன்மையாக கண்டிக்கிறது."

ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்கமய வடபிரதேச சபையின் வருடாந்த மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் பாரதி பாஷிய பாடசாலை மண்டபத்தில் திரு. கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் நல்லூர் கிளையைச் சேர்ந்த திரு. கே. கனகசபாபதி மேற்கண்ட தீர்மானத்தை கொண்டுவந்தார். சாங்கேசன்துறை கிளையை சேர்ந்த திரு. முருகையா இதனை அனுமதித்தார். ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்க உபதலைவர் திரு. டி. பி. வை. குலதுங்கா இம்மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

## "சிங்கள, தமிழ் ஆசிரியர் பிரச்னையெல்லாம் ஒன்றுதான்"

யாழ்ப்பாணம், திங்கள் "கேள்விக் கொத்து விவகாரம் என்னைப் பொறுத்தவரையில் மிகச் சிறிய பிரச்னையாகும். எத்தனையோ பெரிய பிரச்னைகளை எல்லாம் தீர்த்துவைத்த எங்கள் சங்கத்திற்கு இது ஒரு சிறிய பிரச்னையாகும். இவ்விஷயமாக இங்குள்ள ஒரு ஆசிரியராவது பழிவாங்கப்பட்டால், எமது சங்கத்திலுள்ள 92,000 உறுப்பினர்களும் அதனை எதிர்ப்பார்கள் என்பதை கூறிவைக்க விரும்புகிறேன்."

ஸ்ரீலங்கா ஜாதிககுருசங்க வடபிரதேச சபை மகாநாட்டில் சங்க உபதலைவர் திரு. டி. பி. வை. குலதுங்கா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு குலதுங்கா மேலும் கூறியதாவது: சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் பிரச்னை எல்லாம் ஒன்றுதான். வீட்டுப் பிரச்னை; மற்றும் சகல பிரச்னைகளும் ஒன்றுதான். வடபகுதி கல்வி அதிபரின் கேள்விக் கொத்துப்பற்றி சங்கத்தின் மத்திய சபைமூலம் நடவடிக்கை எடுக்க விரும்புகிறோம்,

இதுபற்றி கல்விமா அதிபர் திரு உடுகமவை சந்தித்து ஒரு ஆசிரியர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாதென கூறியிருக்கிறோம் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## 10 வீதம் குறைக்க சிபார்சு

நியூயோர்க் அக் 24 அதிபர் நிக்ஸனின் வெளிநாட்டு உதவித் திட்டத்தில் 10 சத வீதம் குறைக்கும்படி செனட்சபையின் வெளியுறவுக் கமிட்டி சிபார்சுசெய்துள்ளது.

## பாடசாலைகள் தோறும் விவசாயச் சங்கங்கள்

கோப்பாய், ஞாயிறு நாட்டில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் விவசாய சங்கம் ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

உடனடியாக ஒவ்வொரு பாடசாலையிலும் இச்சங்கங்கள் அமைக்கப்பட நடவடிக்கையெடுக்குமாறு கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூது கல்வி அதிபதி (விவசாயம்) டாக்டர் லயனல் டி சில்வாவுக்கு உத்தரவிட்டுள்ளார்

நவீன முறையில் விவசாயத்தில் ஈடுபடவும், விவசாயத்துறையில் மாணவர்களை ஆர்வங்கொள்ள வைக்கும் நோக்கம் கொண்டே கல்வியமைச்சு மேற்படி சங்கங்களை நிறுவத்தீர்மானித்துள்ளது

தானிய பயிர்செய்கை, கோழிவளர்ப்பு, மிருகவளர்ப்பு பழச்செய்கை தேனீவளர்ப்பு போன்ற பல விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட இச் சங்கங்கள் மாணவரை ஈடுபடுத்தும். இதைவிட விவசாய மகாநாடுகள் கருத்தரங்குகள் ஆகியவற்றை பல இலாகாக்களுடனும் தொடர்புகொண்டு நடத்துவதும் இச்சங்கங்களின் வேலைகளாகும். இச்சங்கங்கள் அவ்வப் பகுதிகளிலுள்ள விவசாயி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜெர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

### தேவை

வைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. டொபியில் வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. வசந்தபுரம் வீவ்வர்ஸ், 7, ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

### விற்பனைக்கு

பழனி வாசனை விபூதி நறுமணம் மிக்கது. சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. சகல வைபவங்களிலும் கோவில்களிலும் தினமும் பாவிக்கவும் உகந்தது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, பெரியகடை யாழ்ப்பாணம். கொழும்பு. 3624

நல்ல நிலையிலுள்ள 33 ஸ்ரீ 2765, 33 ஸ்ரீ 48. ஒவ்வொன்றும் 5 தொன் பாரம் ஏற்றக்கூடிய இரண்டு லொறிகள் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். செ. கே. துரைசாமி, கண்டிக்குளி 3686

### தேவை

இனிப்பு வகைகள் (low & high class sweets) செய்யக் கூடிய நல்ல அனுபவமுள்ள தொழிலாளர் உடன் தேவை நற்சாட்சிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் அனுபவத்தைப் பொறுத்தது விளம்பர இல: 3687, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3687

சோப் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர் ஒருவர் தேவை அனுபவத்திற்குரிய சான்றிதழ்களுடன், பெற விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 31-10-71க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3681 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3681

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
(தினசரி 4 காட்சிகள்)
எம். ஜி. ஆர்- ஜெயலலிதா
நடித்த
**ஒளி விளக்கு**

**MANOHARA**
Jaffna
Daily 10-30 a.m., 4, 7, 9-45 p. m.
John Wayne
in
**HATARI**
Please book early. Special concession for a group of 50 and over.

உழுந்தம்பருப்பு வியாபாரத்தில் அதிக லாபம் அடைய குறைந்த கூலியில் உழுந்தை உடைத்துக் கொடுக்கப்படும். நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். மூயதிஇரைண்டிங் மில்ஸ், 443 கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். 3675

### விற்பனைக்கு

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முத்திரை வெளியீட்டுவிழா" நினைவாக "சொக்கன்" எழுதிய நல்லைநகர் தந்த நாவலர் (குறித்த விலை 1-50) இப்போது ஒரு ரூபாவாக விற்பனையாகின்றது. இச் சலுகை 25-10-71 முதல் 31-10-71 வரை. சண்முகநாதன் புத்தகசாலை யாழ்ப்பாணம். தொலைபேசி: 285. 3685

## பெண் கொலை வழக்கு ஒத்திவைப்பு

மட்டுவில், ஞாயிறு

ஆர பிள்ளையின் மனைவியான 48 வயதுடைய சின்னம்மா என்ற பெண்ணைப் பலாத்காரம் செய்ததாகவும், பின் அவரைக் கொலைசெய்ததாகவும் பளைப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. பளைப்பொலிஸ் நிலைய அதிபர் திரு. ஏ. இராசையா, சந்தேக நபரின் வேட்டியையும் இறந்தவரின் சேலையையும் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, மாஜிஸ்திரேட் வழக்கை அடுத்தமாதம் 5-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

......

## இரு வீதிகள் திருத்தப்படும்

அம்பன் ஞாயிறு

வருடாவருடம் அரசாங்கத்திலால் குடத்தனைக்கிராம சபைக்கு வழங்கப்படும் மானியத்தை அம்பன் கந்தசாமி கோயில் வீதிக்கும் நாகர் கோயில் அர்ச் சவேரியார் வீதிக்கும் இவ்வாண்டு மேற்படி கிராமசபை ஒதுக்கியுள்ளது. இதற்கான கேள்விகள் கிராமசபை முதல்வரால் அழைக்கப்படவிருக்கின்றன.

வல்லிபுரப் பகுதியில்

# தினம் 50 லொறிக்கு மேல் மணல் களவு

அம்பன் ஞாயிறு

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மணல் களவாடப்பட்டுவருகிறது. குறிப்பாக வல்லிபுரக் கோவிலடியிலேயே இக்களவு நடைபெற்று வருகிறது. நாளொன்றுக்கு 50 லொறிகளுக்கு மேல் மணல் களவாடப்படுகிறதாம். மணல் கடத்துவோர் கைதுசெய்யப்பட வேண்டுமென்று வடமராட்சி வடக்கு, கிழக்கு காரியாதிகாரி தெரிவித்திருந்தும் மணல் களவில் ஈடுபடுவோர் அதனைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. பெருவாரியான மணல் தினமும் கடத்தப்பட்டுவருகிறது.

......

## ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம் திங்கள்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் உரும்பிராய் இந்துவாலிபயிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் ஸ்கந்தா முதற்பிரிவுவீரர்கள் 4 கோல்களால் வெற்றிபெற்றனர். யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுத்திடலில் இப்போட்டி நடைபெற்றது.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

25-10-71 திங்கள்

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 உரைச்சித்திரம், 7-15 திரைப் பாடல்கள். 7-30 குரல் வகை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசை கீதம்.

இரவு 6-10 வாத்திய இசை 6-15 தமிழோடிசைபாடல் 6-30 பாட்டு, 7-00 வாழ்க்கை வாழ்வதற்கே நாடகம். 7-15 நாட்டுப்பாடல் சித்திரம், 7-30 மறக்கமுடியாத பாடல்கள், 7-45 கண்டதும் கேட்டதும், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 பேச்சு 9-40 நாதசுரம், 10-30 செய்தித் தொகுப்பு. 10-35 ஒலிபரப்பு முடிவு.

புதிய திட்டம்

## மாதிரி வினாக்கள் தயாராகின்றன

கொழும்பு, ஞாயிறு

கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தரப்பரீட்சைக்கான புதியதிட்டம் 1972-ம் ஆண்டு ஏப்ரலில் நடைபெறும் பரீட்சையிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

புதியதிட்டத்தின்படி விஞ்ஞானப் பாடங்களுக்கான வினாப்பத்திரங்கள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை மாணவர்கள் அறிந்து கொள்ள வசதியாக பரீட்சை திணைக்களம் ஒவ்வொரு பாடத்துக்கும் மாதிரி வினாப்பத்திரங்கள் தயாரித்துவருவதாகவும், அதன் விலை 75 சதமாகும் எனவும் அறியவருகிறது.

பௌதிகவியல் இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகியவற்றுக்கான பாடப்புத்தகங்கள் இப்பொழுது தயாராகவிருக்கின்றன. ——

## கட்டிட வேலை துரிதம்

கேதீஸ்வரம் ஞாயிறு

நானாட்டான் ஸ்ரீசெல்வமுத்து மாரியம்மான் கோவில் வசந்த மண்டபத்தின் கட்டட வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளன. இக்கட்டட வேலைகளுக்கு இந்துக்கள் மட்டுமன்றி பிறமதத்தவர்களும் நிதியுதவி வழங்கியுள்ளதுடன் அங்கு சிரமதானப் பணியிலும் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

பருத்தித்துறை ஞாயிறு

பருத்தித்துறை மாவட்ட பிரசிக்கல் காரியாலயத்தைச் சேர்ந்த திரு. எம். சிதம்பரநாதன் அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து நுவரெலியா மாவட்ட பிரசிக்கல் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.


**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா
நடித்த
**நூற்றுக்கு நூறு**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
**காவியத்தலைவி**

**லிடோ** [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.



ராஜேஷ்கன்னா
ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார்
மரீலாலால்
[நடித்த]
சக்தி பிலிம்ஸ்
[ஈஸ்ட்மன்கலர் சித்திரம்]
**ஆராதனா**

கடைசி வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு, 4 காட்சிகள்.
**அக்கா தங்கை**
* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா
* சுந்தரராஜன் சௌகார் ஜானகி
இன்னும் பலர் நடித்தது.

**வெல்லிசினிமா**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த
**நிறைகுடம்**

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
THE YOUNG GUNS
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
**நில் கவனி காதலி**

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Kerwin Mathews,
Pier Angeli
in
OSS 117
PANIC IN BANGKOK
(Cinemascope-Color)
தினசரி பி.ப. 2-00, 10-00
சிவாஜி-- சரோஜாதேவி
நடித்த
**கல்யாணியின் கணவன்**

**இலங்கை ஆயுள்வேத கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்**
ஆசவங்கள் — அரிஷ்டங்கள்
லேகியங்கள் — சூறணங்கள் — மருந்துச்சரக்குகள்
மேற்படி கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை அல்லது வியாபாரப் பதிவைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.
**ஜண்டு பாமஸி**
[ZANDU PHARMACY - BOMBAY]
ஆசவங்கள் — அரிஷ்டங்கள்
லேகியங்கள் — சூறணங்கள் — பஸ்பங்கள்
மற்றும்
பிரபல ஆயுள்வேத வைத்தியர்கள், பார்மஸிகள் தயாரிக்கும்
மருந்துகள் — குளிகை வகைகள்
சூறணங்கள் — தைலங்கள்
மற்றும்
குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, தைலங்கள் எண்ணெய் வகைகள், மருந்துச்சரக்குகள்
எப்பொழுதும் மலிவாகக் கிடைக்கும்.
**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)
53, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். இந். எல்லையில் குமுறல்; இந்திரா வெளிநாடு புறப்பட்டார்

## உலகத் தலைவர்களிடம் நிலைமையை நேரில் விளக்குவாராம்

புதுடில்லி, அக்டோபர் 24

**பாகிஸ்தானுடனான இந்திய எல்லையில் பயங்கரமோர் சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்த போதினும் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது வெளிநாட்டுப் பிரயாணத்தை ஒத்திப்போடாமல் புறப்பட்டுப்போயிருக்கிறார்.**

இந்திய மக்களை ஒற்றுமையுடனும், அமைதியுடனும் இருக்கும்படியும், எந்த நிலைமைக்கும் தயாராய் இருக்கும்படியும் நாட்டைவிட்டு புறப்படுமுன் திருமதி காந்தி வேண்டுகோள் விடுத்தார்.

உலகத்தலைவர்களைச் சந்திப்பதற்காக பிரதமர் இந்திரா மேற்கு நாடுகளுக்குப் போய் இருக்கிறார். மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சுமார் மூன்று வாரங்கள் பிரதமர் இந்திரா சுற்றுப்பயணம் செய்வார்.

புதுடில்லியிலிருந்து புறப்பட்டுள்ள பிரதமர் முதலில் பிரஸல்ஸில் இறங்குவார். ஆஸ்ட்ரியா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மன், பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்லும் அவர் அந்த நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்துவார். இந்தப்பேச்சுகளில் வங்காள தேசப் பிரச்னையே முக்கிய இடம் வகிக்கும் என்று கருதப்படுகின்றது. எல்லையில் போர் அபாயம் குமுறிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் பிரதமர் இந்திரா மேற்கு நாடுகளுக்குப் பயணம் ஆரம்பித்துள்ளது பற்றி ராஜதந்திர வட்டாரங்களில் பலவிதமாகப் பேசிக்கொள்ளப்படுகின்றது. வங்காளதேசம் பற்றிய இந்தியாவின் நிலைமையை மேற்கு நாடுகளின் தலைவர்களுக்கு கடைசிமுறையாக நேரடியாகவே சொல்லிவிட அவர் தீர்மானித்திருக்கக்கூடும் என்றும், இந்தப்பிரயாணத்தின் பின்னர் அவர் நாடு திரும்பியதும் வங்காள தேசம் சம்பந்தமாக இந்தியா தீவிரமான சில நடவடிக்கை எடுக்கும் அல்லது புதிய கொள்கை எதையாவது அறிவிக்கக்கூடுமென்றும் அவதானிகள் கருதுகின்றனர். வங்காள தேசத்தை பிரதமர் நாடு திரும்பியபின்னர் அங்கீகரிப்பது சம்பந்தமாக தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது. எது எவ்வாறாயினும் இந்தக் கட்டத்தில் திருமதி காந்தி மேற்கொள்ளும் இந்தப் பயணத்தின் விளைவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது.

மேலும், நேற்று முன்தினம் மாலை பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது வெளிநாட்டுப்பயணம் சம்பந்தமாக நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தியில் உலகத் தலைவர்களிடம் இந்திய உபகண்டத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையின் உண்மையான தன்மையை எடுத்துக் கூறப்போவதாகத் தெரிவித்தார். நாட்டின் பாதுகாப்புக்குப்பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்புப்படைகள் மாத்திரமல்ல மக்களும் விழிப்பாக இருக்கவேண்டுமென்று திருமதி காந்தி தமது செய்தியில் கூறினார்.

## உலக அமைதியை இந்தியா கெடுக்கிறதாம்

உலகஅமைதியை இந்தியா போன்ற நாடுகள் கெடுத்து வருவதாக பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகான் ஐ. நா. தினத்தையொட்டி வெளியிட்ட செய்தி யொன்றில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாபோன்ற நாடுகள் அண்டைநாடுகளின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிட்டு பூசல்களை உருவாக்கி வருவதாகவும் இந்த நாடுகள் ஐ. நா. கோட்பாடுகளை உதாசீனம் செய்வதாகவும் அதிபர் யாஹ்யாகான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானுடன் சண்டைபோடுவதற்கான ஆயத்தங்களை இந்தியா செய்து வருவதாக பாகிஸ்தான் வானொலி சுட்டிக் காட்டியுள்ளது.

இந்திய எல்லைப்படையினர் பாகிஸ்தானுடனான எல்லையில் பெருமளவில் ஊடுருவல் செய்திருப்பதாகவும் அந்த வானொலி குற்றஞ் சாட்டியது.

## அரபுக்களை ஊக்குவிக்குமாம்

டெல்அவிவ், அக். 24

இஸ்ரேலுக்கு மேற்கொண்டும் பென்டம் சண்டை விமானங்களைக் கொடுத்துதவ அமெரிக்கா தயக்கம் காட்டுவது இஸ்ரேலுக்கு எதிராக அரபுக்களை ஊக்குவிப்பதாக அமையும் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மோசேதயான் கூறியிருக்கிறார்.

## கடைசிக்கட்ட ஆலோசனை

ஹாங்காங், அக். 24

தற்போது பீகிங்கில் இருக்கும் அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனின் விசேஷ ஆலோசகர் டாக்டர் கிஸிங்கர் சீனப்பிரதமர் திரு. சூஎன்லாயுடனும் மற்ற அதிகாரிகளுடனும் கடைசிக்கட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கிறார்.

அதிபர் நிக்ஸனின் எதிர்வரும் சீன பயணத்துக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்காக டாக்டர் கிஸிங்கர் பீகிங் வந்து சீனப்பிரதமருடன் பேச்சு நடத்துகின்றார். இந்தப் பேச்சுக்க[illegible]ளை எதுவும் வெளியிடப் [illegible] மாட்டாது என்று தெரிகின்றது.

## அகதிகளுக்கு பிரி. கம்பளிகள்

லண்டன், அக். 24

ஆக்ஸ்பாம் ஸ்தாபனம், இரு விமானம் நிறையக் கம்பளிகளை கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. மொத்தம் 32,000 கம்பளிகள் அனுப்பப்படுகின்றன.

அகதிகளின் நலன்களைக் கவனிக்கும் ஐ. நா. உயர் தூதரின் வேண்டுகோளின் பேரில் ஆக்ஸ்பாம் இக்கம்பளிகளை அனுப்புகிறது. அகதிகள் வசிக்கும் பிரதேசத்தில் தற்போது பணி புரியும் தனது அலுவலர்களுக்கும் இந்த தாபனம் உள்ளூரிலேயே கம்பளி வாங்கப் பணம் அனுப்பியுள்ளது.

ஆக்ஸ்பாம் அளிக்கும் நிவாரண வேலைகளைக் கல்கத்தாவில் கண்காணிக்கும் மேஜர் ஜி. டபிள்யு அக்வோர்த் இக்கம்பளி விநியோக ஏற்பாடுகளையும் கவனிப்பார். பிரிட்டனில் இருந்து அனுப்பப்படும் கம்பளிகளின் மதிப்பு 34,000 பவுண்களும். ஆனால் ஆக்ஸ்பாமுக்கு பிரிட்டிஷ் உற்பத்தியாளர்கள் இவற்றை மலிவாகக் கொடுத்துதவியுள்ளார்கள்.

எழுபத்தெட்டு தொன் நிறையான குழந்தை உணவுகளையும் இந்த தாபனம் அக்டோபர் 26-ம் திகதி அகதிகளுக்கு அனுப்பிவைக்கிறது.

பிரிட்டிஷ் அரசாங்கம் ஒதுக்கிய 80 லட்சம்பவுண் நிவாரண நிதியில் பிரிட்டிஷ் தர்ம நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் பவுண் பயன்படுத்தப்பட்டுவிட்டது. அகதிகளுக்கான ஐ. நா. உயர் தூதருக்கு ஒதுக்கப்பட்ட இருபது லட்சம் பவுண் பயன்படுத்தப்பட்டுவிட்டது. அகதிகள் முகாம் அமைக்கும் தளபாடங்கள் வாங்கி அனுப்ப ஐந்து லட்சம் பவுண் பயன்படுத்தப்பட்டது. அரிசி வாங்கி அனுப்புவதற்கு 25 லட்சம் பவுண் பயன்படுத்தப்பட்டது. இந்தியாவில் கம்பளிகள் முதலியன வாங்குவதற்கு இருபது லட்சம்பவுண் அனுப்ப ஆயத்தமாக இருக்கிறோம் என பிரிட்டிஷ்வெளிநாட்டு அபிவிருத்திக் கழக அமைச்சர் திரு ரிச்சார்ட் வுட் அண்மையில் பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் அறிவித்தார்.

இது தவிர மேலும் 75 லட்சம் பவுனை நிவாரண நிதியாக ஒதுக்க முடிவுசெய்திருப்பதாகவும் சபையில் அறிவிக்கப்பட்டது.

## எல்லைப் பகுதியில் புதிய தாக்குதல்

பாகிஸ்தானுடனான எல்லைப்பகுதியில் சில இடங்களில் பாகிஸ்தான் படையினர் இந்திய கிராமங்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது. திரிப்புராவில் நேற்று இரவுசுமார் இரண்டு மணி நேரம் குண்டுமாரி பொழிந்ததாகவும் இதில் சுமார் 20 கிராமவாசிகள் காயமடைந்ததாகவும் இந்திய வானொலி கூறியது.

கடந்த புதனன்று கமல்பூர் என்ற இடத்தில் பாகிஸ்தான் படைகள் நடத்திய தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

காஸ்யா அரங்கில் விடுதலைப் படையினர் தமது போராட்டங்களைப் பலப்படுத்தியிருப்பதாகவும் இதனால் சில இடங்களில் பாகிஸ்தான் ராணுவம் விமானங்களைக்கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் சொல்லப்படுகின்றது. பாகிஸ்தான் ராணுவம் விமானத் தாக்குதல்களைப் புதுப்பிப்பதால் அங்கிருந்து திரிப்புராபகுதிக்கு அகதிகள் வந்து குவிவது அதிகரித்திருக்கிறதாம். கிழக்குப்பாகிஸ்தானின் கிழக்கு அரங்கில் சில தினங்களில் மட்டும் பாகிஸ்தான் படையினர் சுமார் 200 பேரைக்கொன்று குவித்துவிட்டார்களாம்.

### ரிசர்வ் படை

பாகிஸ்தானுடனான எல்லைப்பகுதியிலுள்ள இந்தியப் படைகளுடன் சேர்ந்து கொள்ளுவதற்காக இந்திய ரிசர்வ் படையினர் 600,000 பேர் உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள். எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் ராணுவ அணிகள் பெருமளவில் குவிக்கப்படத் தொடங்கியிருப்பதின் காரணமாக இந்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாம்.

## பாரத - சீன தூதர்கள் பரிமாற்றம்

புதுடில்லி, அக். 24

இந்தியாவும் சீனாவும் மீண்டும் தூதர்களைப் பரிமாறிக்கொள்ள இணங்கியுள்ளனவாம்.

"இந்துஸ்தான் டைம்ஸ்" என்ற பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

பீகிங்கிலும்புதுடில்லியிலும் உள்ள தூதரகங்களின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்று அச்செய்திகள் கூறுகின்றது.

## காஸ்ட்ரோவுக்கு கடும் சுகவீனம்

லண்டன், அக். 24

கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ கடும் சுகவீனமுற்று படுத்த படுக்கையாய் இருப்பதாக சன்டே டெலிகிராப் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

டாக்டர் காஸ்ட்ரோ சுவாசப்பை கோளாறினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அச்செய்தி கூறுகின்றது. பல வருடங்களுக்கு முன் ஏற்பட்ட சுவாசக்குழாய் உபாதை சரியாக குணமாக்கப்படாமலிருந்ததாகவும், டாக்டர் காஸ்ட்ரோ இடைவிடாமல் சிகரட் புகைப்பதின் காரணமாக அது மோசமாகி விட்டதாகவும் அச்செய்தி கூறுகின்றது. சமீப காலத்தில் டாக்டர்காஸ்ட்ரோ தீவிர பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்ததும் இந்த நிலைமைக்குக் காரணம் என்று கருதப்படுகின்றதாம்.

### அகதிகளுக்கு உதவ

## ஆஸ்திரேலியா மறுப்பு?

சிட்னி அக். 24

இந்தியாவிலுள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளுக்காக அரிசி ஏற்றுமதி செய்வதற்கான செலவுதொகையை ஆஸ்திரேலிய அரசாங்கம் கொடுப்பதற்கு மறுத்துவிட்டதாம். "ஆஸ்ட்ரேஷியன்" என்ற பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கின்றது. சுமார் 10 லட்சம் ஆஸ்திரேலிய டாலர் பெறுமதியான ஆஸ்திரேலிய அரிசி கிழக்குவங்காள அகதிகளுக்காக அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு 30,000 டாலர் செலவு பிடிக்கும். இந்தச் செலவை இப்பொழுது ஐ. நா. ஏற்றுக்கொள்ளும் என்று தெரிகின்றது. "ஆஸ்திரேலியாவின் இந்த நடவடிக்கை ஆச்சரியமளிப்பதாகவே இருக்கின்றது. என்றாலும் இந்தச் செலவை எங்களை ஏற்றுக் கொள்ளும்படி ஆஸ்திரேலியா கேட்டிருக்கிறது" என அகதிகளுக்கான ஐ. நா. ஹைகமிஷன் திரு. ஒகவுல்பீக் கூறினார். ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களுக்கான செலவுகளை கனடா அல்லது வேறு ஒரு ஐரோப்பிய நாட்டை ஏற்றுக்கொள்ளும்படி ஐ. நா. ஹைகமிஷன் கேட்டுக்கொள்ளும் என்று தெரிகின்றது.

## அப்பல்லோ-16 மார்ச்மாதம் புறப்படும்

ஹூஸ்டன், அக். 24

அப்பல்லோ-16 கலத்தின் சந்திரயாத்திரை அடுத்த திகதி ஆரம்பமாக விருக்கின்றது.

இந்தக் கலத்தில் சந்திரனை நோக்கிப் புறப்படவிருக்கும் வீரர்கள் மூவரும் இப்பொழுது தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அப்பல்லோ-16 வீரர்கள் மார்ச் மாதம் 29ம் திகதி சந்திரனை அடைவார்கள் என்றும் [illegible] அங்கு முன்பு சென்ற வீரர்களைவிட அதிக நேரம் தங்குவார்கள் என்றும் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கேள்விக்கொத்து' விவகாரம்: ஆசிரியர்கள் கருத்து

# "வடமாநில கல்வி அதிபர் எடுத்த நடவடிக்கை சரியானது"

— திரு: அப்பாத்துரை

# "மகாவித்தியாலய ஆசிரியர்களிடம் விபரம் கோருவதில் தவறில்லை"

- திரு. மார்ட்டின்

## "இது அந்தரங்கமான அரசியல் சூழ்ச்சி"

— திரு. முருகையா

(நமது நிருபர் 'யோகி')

" எந்த ஒரு ஆசிரியரையும் பழிவாங்கும் நோக்கமாக வடமாநில கல்வி அதிபர் கேள்விக்கொத்துகளை அனுப்பவில்லை. கல்வியில் உள்ள குறைபாடுகளை அறிந்து அவற்றை சீராக்கவே அவற்றை அனுப்பினார். ஆசிரியர்களிலா அல்லது கல்வி இலாகாவிலா பிழை என்பதை அறியவே அவர் இப்படிச்செய்தார். அவர் மீது குறைசொல்வதில் அர்த்தமில்லை"

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க வடபிரதேச சபையின் மகாநாட்டில் புங்குடுதீவை சேர்ந்த ஆசிரியர் ஆர். ஆர். அப்பாத்துரை பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் பாரதி வாஷிய பாடசாலையில் திரு. கிருஷ்ணபிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கேள்விக்கொத்து பற்றி இக்கூட்டத்தில் மூன்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

திரு. அப்பாத்துரை தொடர்ந்து கூறியதாவது:

ஆசிரியர்களை பழிவாங்கும் நோக்கம் தமக்கில்லை என திரு.மகாதேவா, பரிசளிப்பு விழாக்களிலும் பத்திரிகை மூலமாகவும் தெரிவித்துள்ளார். 70-ம் ஆண்டு பரீட்சை குறைபாட்டிற்கு காரணம் யார்? ஆசிரியர்களின் குறைபாடா? அல்லது கல்வி இலாகாவின் குறைபாடா என அறியவிரும்பினர்.

கேள்விக்கொத்தில் உள்ள ஒரு கேள்வியை நீங்கள் கவனிக்கவேண்டும். எவ்வளவு தூரம் அடிக்கடி நேர சூசிகை மாற்றியமைக்க நிர்ப்பந்தப்பட்டீர் எனக் கேட்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களை கல்வி இலாகா அடிக்கடி இடமாற்றியதனால்தான் நேர சூசிகை மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆதலால் இது யாருடைய தவறு? கல்வி இலாகாவின் தவறல்லவா? 70-ம் ஆண்டு 10 தடவை நான் நேரசூசிகை மாற்றியிருக்கிறேன் கடந்த 15ம் திகதியும் ஆசிரியர் ஒருவர் மாற்றப்பட்டார். 10-ம் திகதி ஆங்கில ஆசிரியர் வந்தார். பின் 15-ம் திகதி தமிழ் ஆசிரியர் மாற்றப்பட்டார். இந்த நிலையில் பிள்ளைகளுக்கு எப்படி கல்வி கற்பிக்கமுடியும். மாணவர் தேர்ச்சிக் குறைவுக்கு அடிக்கடி ஆசிரியர்களை மாற்றுவதும் காரணமாக இருக்கலாம். ஆதலால் வடமாநிலக் கல்வி அதிபர் எடுத்த நடவடிக்கை சரியானதே.

### கல்வி இலாகா பொறுப்பு

நல்ல விஞ்ஞானகூட வசதியுள்ள பட்டதாரிகள் உள்ள மகாவித்தியாலயங்களில் 100க்கு 20 வீதம் தேர்ச்சி பெறும்போது, கிராமப் பாடசாலைகளில் 100க்கு 30 வீதம் தேர்ச்சி பெற்றால் அக்கிராமப் பாடசாலைகளை பாராட்டத்தான்வேண்டும். நான் கல்வி அதிபருக்கு வக்காலத்து வாங்க வரவில்லை. என் கருத்தில் பட்டதைக் கூறுகிறேன். மாணவர்கள் தேர்ச்சி பெறாததற்கு ஆசிரியர்கள் மட்டுமல்ல கல்வி இலாகாவும் பொறுப்பு என்பது என் சொந்தக் கருத்து.

திரு. ஏ. சபாரப்பிள்ளை: (அச்சுவேலி) எனது பகுதியில் கேள்விக்கொத்திற்கு ஒருவரும் பதில் கொடுக்காதபடியால் நானும் கொடுக்கவில்லை. துறைமுக தொழிலாளிபோல் ஆசிரியர்கள் நடப்பதாகஎன்னிடம் கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நான் அவரைச் சந்திக்கச் சென்றபோது உங்களுக்கு விவேகம் தனித்துவம் இல்லையா? என்றும் அவர் கேட்டார். குழுவில் தனித்துவத்திற்கு இடமில்லையென்றும் தனிமனிதனாக நடந்திரை சமூக விரோதியாவேன் என்றும் சொன்னேன். என் கிளையின் விருப்பப்படி நான் செய்தேன் என்றும் கூறினேன். உடனே அந்த அதிகாரி உமது சொந்த அபிப்பிராயம் என்ன? என்று கேட்டார். தனிப்பட்டமுறையில் கேள்விக்கொத்திற்கு பதிலனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லையென்றேன்.

17 வருட ஆசிரிய அனுபவத்தில் நான் அக்கேள்விக்கொத்தை நிரப்பி அனுப்பியிருந்தாலெனது திறமையை அறிந்திருப்பீர்கள் என்றும் ஆனால் எனது கிளையின் முடிவுப்படி நான் அனுப்பவில்லை என்றும் அவரிடம் சொன்னேன். எடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர் சொன்னார். எனக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், என் முழுச்சங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வரும் என்று அவரிடம் சொன்னேன். உடனே அவர் சிரித்தார். அவர் மனதில் என்ன நினைத்தாரோ எனக்குத் தெரியாது.

அரசியல் வாதிகளை நாம் நம்பக்கூடாது. நீங்கள் அரசியல் வாதிகளாக வரவிரும்பினால் ஏமாற்றப்படவேண்டும். இது ஒரு கல்விப் பிரச்சினை. தேவையான தகவல்களை அதிபர்களிடம் சேகரித்திருக்கலாம்.

ஆசிரியர் ஒருவர்: இதுவரை கேள்விக்கொத்துக்குப் பதில் கொடுத்தவர்களின் நிலை என்ன?

தலைவர்: ஆசிரியர் சம்மேளனம், சங்கங்கள் எல்லாம் சேர்ந்து இதை எதிர்க்கிறது. ஆதலால் அனுப்பினவர்களும் எதிர்க்கின்றார்கள் என்பதுதான் அர்த்தம்.

தலைவர்; இதுபற்றி கல்வி அதிபர் எங்களுடன் கலந்தாலோசிக்காமல் எம். பி.களுக்கு விளக்கம் அனுப்பியது தவறு. இதனை கடைசிவரை எதிர்ப்போம். கல்வி அதிபர் இன்று எங்களை அழைத்தாலும் இதுபற்றிப் பேசுவதற்கு நாங்கள் தயார். நாங்கள் பழிவாங்கப்படவிருக்கிறோம். ஆதலால் வாக்குக்கு விடாமல் ஏகமனதாக தீர்மானிப்பதுதான் நல்லது.

... தென்பகுதி கல்விக்கந்தோர் ...டுக்கும் நிறைபவித்தியாசமுண்டு. தென்னிலங்கையில் சில எம். பீக்களைத் தவிர மற்ற எம். பீக்கள் எல்லாரும் ஆசிரியர்களுடன் ஒத்துழைக்கிறார்கள். தொழிற்சங்கங்களுக்கு ஆதரவளிக்கின்றார்கள். யாழ்ப்பாணத்து எம். பீக்கள் ஆசிரியர்களுக்கு எதிராக இருக்கின்றார்கள். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுடன் இப்பகுதி எம்.பீக்கள் சேர்ந்து ஆசிரியர்களைபழிவாங்குகிறார்கள்.

தென்னிலங்கை எம். பீக்கள் சோஷலிசஇலங்கையை உருவாக்க முயலுகிறார்கள். வடபகுதி எம்.பீக்கள் அதற்கு மாறாக செயலாற்றுகிறார்கள். நாம் இவ்விஷயத்தை ஒற்றுமையாக எதிர்க்கவேண்டும். வடமாநில கல்வி அதிபர் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு கேள்விக் கொத்துக்களை அனுப்பியிருக்கலாம். இதுபற்றி கருத்தரங்கு நடத்தியிருக்கலாம். கடைசிநேரத்தில் தமக்கு ஆதரவாக எம் பீக்களைச் சேர்க்கப்பார்க்கிறார். இது அரசியல் பிரச்சினை பல்ல. கல்விப் பிரச்சினை. ஆசிரியர்கள் இதனை ஏகோபித்து எதிர்க்கவேண்டும்.

தலைவர்: ஆசிரியர்கள் விஷயத்தில் எம். பீக்கள் தலையிடுகிறார்கள் இதில் ஆசிரியர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வடபகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை நோய் பரவுகிறது. யாழ்ப்பாண ஆசிரியர்கள் நிலை பரிதாபகரமானது. ஆசிரியர்களை நியமிக்கும்படி கேட்டால் அரசாங்கம் நிதி இல்லை என்கிறது. நாட்டில் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறை தீர்ந்தால்தான் உயர்வடையும். முதலில் இக்குறைகளை நீக்கவேண்டும்

திரு. குமாரசாமி: ஆசிரியர்கள் பற்றாக்குறையால் பாடசாலைகள் மூடவேண்டிய நிலைமை வடபகுதியில் ஏற்பட்டு வருகிறது சில பாடசாலைகளில் கணவனும் மனைவியும் குடித்தனம்செய்கிறார்கள் பளுத்தித்துறைப் பகுதியில் பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. தீவுப் பகுதியிலும் இதே நிலைதான். இந்தக் குறைகளை நீக்க முயற்சிக்காமல் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை எடுத்திருக்கிறார்கள்.

திரு சிவஞானரத்தினம் கேள்விக் கொத்துக்களை அனுப்பிவிட்டு கொழும்பிற்குச் சென்றபடியால் தான் கற்றுநிரும் அனுபவதாமதமாகியது என கல்வி அதிபர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு மகளிர் பாடசாலையில் போதிய ஆசிரியர்கள் இருந்தும் 400 மாணவர்களில் 40 பேரே சித்திபெற்றனரென்றும், இந்தநிலை ஒழிக்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் சொன்னார். ஆனால் ஆசிரியர்களை பழிவாங்குவதுதான் கேள்விக் கொத்தின் நோக்கம், கொக்குவிலில் ஒரு பாடசாலையில் மதிலதிபடுக்கும், ஆசிரியர் களுக்குமிடையில் நடந்த பிரச்சினையில் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. காரணம் வேறு காட்டப்பட்டது. பெரும்பாலான ஆசிரியர்களை வெளியேற்றுவதுதான் இந்தக்கேள்விக் கொத்தின் நோக்கம். அதனால்தான் இதை எதிர்க்கிறோம். மாணவர்கள் சித்தியடையாததற்கு ஆசிரியர்கள் பொறுப்பல்ல. மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும், பரீட்சையில் சித்தி பெறாமலே மேல்வகுப்பிற்கு உயர்த்தப்படுகிறார்கள். ஆதலால் ஜி. சி. ஈ ஆசிரியர்கள்தான் இதற்கு பொறுப்பு என்று கூறமுடியாது இதன் அடிப்படை நோக்கம் ஆசிரியர்களைக் கண்டிப்பதுதான் எந்த இலாகாவிலும் இப்படிக்கேட்பதில்லை.

நாங்கள் கல்வி மா அதிபர் உடகமவை சந்தித்தோம். இதுபற்றிவிளக்கிக்கூறினோம் 'கவனிக்கிறேன்; பார்க்கிறேன் அதுவரையும் அனுப்பத்தேவையில்லை' என்று உறுதிமொழியளித்தார்.

பத்திரிகையொன்று திரித்துக்கூறியபடியால் அவர் மாற்றுக்கருத்தைக் கூறியிருக்கிறார் இன்று எம் பீக்களுக்கு கேள்விக்கொத்து பற்றி விளக்கம் அனுப்பியிருக்கிறார்.

### கேள்விக்கொத்து அனுப்பாதீர்

வடமாகாணத்தில் பெரும்பாலான எம் பீக்கள் அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆசிரியர்களை தூண்டிவிட கேள்விக்கொத்து பயன்படுகிறது. அதற்கு எம் பீக்களின் ஆதரவும் திரட்டப்படுகிறது. தான்செய்ததுசரி என ஏற்கவேண்டும் அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து போகவேண்டும் என்பதுதான் கல்வி அதிபரின் நோக்கமாக இருக்கிறதாக தெரிகிறது. இதுபற்றி இறுதி முடிவுவரும்வரை யாரும் கேள்விக்கொத்து அனுப்பவேண்டாம்.

திரு.மாட்டின் (கொழும்புத்துறை) விஞ்ஞானகூட வசதிகள், பட்டதாரி, விசேஷ ஆசிரியர்களைக் கொண்ட மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கு கேள்விக்கொத்து அனுப்புவதில்நியாயமிருக்கிறது. கீழ்ப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு கேள்விக்கொத்து அனுப்புவதுதவறு. கல்வி அதிபர் மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கு கேள்விக்கொத்து அனுப்பியதில் தவறில்லை எனக் கருதுகிறேன்.

திரு கனகசபாபதி (நல்லூர்) கேள்விக்கொத்து பற்றிய பிரேரணையை கடைசி நேரத்தில்தான் சமர்ப்பிக்கும் நிலை ஏற்பட்டது. இது பற்றி மூன்றுவித கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியசங்கங்கள் எல்லாம் இதனை எதிர்ப்பதால், சபை ஏகோபித்த முடிவெடுக்க வேண்டும்என்பது என்கருத்தாகும்.

கேள்விக் கொத்து பற்றிய விளக்கத்தை எம். பிக்கு அனுப்பி இதனை அரசியல் பிரச்சினையாக மாற்ற முயற்சிக்கும் வடமாநில கல்வி அதிபரின் செயலை இச்சங்கம் கண்டிக்கிறது' என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.


**காரியம் வெற்றி பெற்றதும் பணம் செலுத்த வசதி**

ஆயினும் வெற்றி கிட்டிய பின்னும் பணம் செலுத்தாமல் வஞ்சிப்பவர்களிடமிருந்து மாந்திரீக முறையில் பணம் பெறுவது எனது பொறுப்பாகும்.

நான் செய்து கொடுத்த பரிகாரம் இதுவரை பிழைத்ததில்லை.

14 நாட்களில் கிரகதோஷங்கள் விலக, தொழில் கிட்ட, வியாபாரத்தில் நட்டமடையாது முன்னேற, வீட்டில் எப்போதும் ஏற்படும் நோய்தொடி துன்பங்கள் ஒழிய, தான் விரும்புபவர் எவராயிருப்பினும் வசப்படுத்திக்கொள்ள, மூத்தோர் விருப்பத்தைப்பெற, வேண்டாதவர்களை ஒதுக்கிவிட, பகைவர்களுக்குத் தண்டனை அளிக்க மற்றும், பரீட்சை, பந்தயம், நேர்முகப் பரீட்சைகளில் உயர்வான முறையில் வெற்றிபெற இவற்றைவிட இன்னும் தேவையான எந்தக்காரியத்திற்கும் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

நேரில் சந்திக்க விரும்புவோர் கடிதம் எழுதி வசதியான நாளை ஒதுக்கிக்கொள்ளவும், 3 மாதங்களில் பணம் செலுத்த வசதி செய்து கொடுப்பேன்.

**பரீட்சையில் சித்தியடைந்த பின் பணம் செலுத்துங்கள்**

மாந்திரீக பலத்தினால் சித்தியடையச்செய்யக்கூடியவன் நான் மட்டும்தான் என்பதை மீண்டும் தெரியப்படுத்துகிறேன்.

சென்ற ஆண்டில் என்னிடம் 4383 பேர் மாந்திரீகம் செய்து சித்தியடைந்துள்ளார்கள்.

நீங்கள் எடுக்கும் எல்லாப் பாடங்களையும் குறிப்பிட்டு, பிறந்த நேரத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை குறிப்பிட்டு எழுதி விபரங்களை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

வி. ராமையா, குக்கஹவில. V. G.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி. ஸி. ஈ, சாதாரண, உயர்தர

# மாணவர்க்கும் விளக்கொத்து விரைவில் கிடைக்கும்

## வடமாநில வித்தியாதிபதி தகவல்

(மட்டுவில் நிருபர்)

ஜி. ஸி. ஈ. சாதாரண, உயர்தர மாணவர்கள் பதிலளிக்கவேண்டிய ஒரு விளக்கொத்து விரைவில் அவர்கள் கையில் கிடைக்கவிருக்கிறது.

இத்தகவலை வடமாநில வித்தியாதிபதி திரு. டபிள்யு டி. ஸி. மகாதந்தில தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரைநிகழ்த்துகையிலேயே திரு. மகாதந்தில மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

சென்ற 22-ம் திகதி நேற்றடி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் வித்தியாதிபதி திரு. மகாதந்தில மேலும் பேசுகையில் கூறியதாவது:

இவ்வித விளக்கொத்துக்கள் யாரையும் தண்டிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படவில்லை. ஊக்கத்தை வளர்த்துத் திறமையை வெளிப்படுத்தும் நோக்கத்துடனேயே தயாரிக்கப்படுகிறது. யாரையும் தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. கல்வித்துறையில் நல்ல வளர்ச்சி ஏற்படவேண்டுமென்பதே எமது நோக்கம். இவ்வித நோக்கத்தில் எழுந்ததே இவையெல்லாம்.

வடபகுதி மாணவர்கள் கல்வித்துறையில் வெகுதூரம் முன்னேறவேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். கல்வியைப் பொறுத்தவரை குறுகிய மனப்பான்மையேதும் இருக்கக்கூடாது என்பது எனது சொந்த விருப்பம்.

கல்வித்துறையிலே ஏற்படவிருக்கும் புதிய மாற்றம் பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகையில் இது எதிர்காலத்தில் நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்தும் என தாம் முழுமையாக நம்புவதாகக் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், இப்பொழுதிருக்கும் இருள் மேகங்கள் கலைந்து உண்மையான திறமைசாலிகளுக்கு உரிய மதிப்பும் கிடைக்கும் நிலை ஏற்படவேண்டுமென்றும் கெட்டித்தனமான மாணவர்களுக்கு சர்வகலாசாலைத் தடைகள் இருக்கக்கூடாதென்றும் கல்வித்துறை புனிதமான ஒரு துறையாக்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

கல்வித்துறையில் மாற்றத்தைத் தாம் பெரிதும் வரவேற்பதாகக் கூறிய எம். பி. இந்த மாற்றம் நல்லதொரு மாற்றமாக இருப்பதையே தாம் விரும்புவதாகவும் எடுத்துக் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. எம். சபாரத்தினம் கல்லூரி அறிக்கையில் கல்லூரி வளர்ச்சிபற்றி எடுத்துக் கூறினார். உடுவில் மகளிர் கல்லூரி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை செல்வி ஏ. ஹென்சன் பரமசாமி பரிசில்களை வழங்கினார்.

### பாலுணவுக்கு நிதி உதவி

சுழிபுரம், ஞாயிறு

குடத்தனை கிராமசபைக்கு 800 ரூபாவும், கம்பர்மலை கிராமசபைக்கு 700 ரூபாவும், செம்பியன்பற்று கிராமசபைக்கு 800 ரூபாவும் குழந்தைகளுக்கு வழங்கும் பாலுணவுக்கான இவ்வாண்டு நிதியாக அரசாங்கம் வழங்கியுள்ளது.

### இலவச மருந்துகள்

லண்டன், அக். 24

லண்டன் டாக்டர் ஒருவர் மனதில் உதித்த திடீர் யோசனை ஒன்றால், அபிவிருத்தி அடையும் நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான வசதியற்ற கிராமிய வைத்திய சாலைகளுக்கு யோகம் அடித்துள்ளது.

மருந்துக்கம்பனிகள் தமது மருந்துகளின் மாதிரிகளை (சாம்பிள்கள்) டாக்டர்களுக்கு அனுப்பிவைப்பது வழக்கம். பிரிட்டிஷ் டாக்டர்களுக்கு இவ்வித மாதிரிகள் வருடந்தோறும் ஏராளமாக வந்து குவிகின்றன. டாக்டர்கள், மாதிரிகளுடன் கம்பனிகள் அனுப்பும் விளக்கக் குறிப்புகளை வாசித்துவிட்டு மாதிரிகளை எறிந்து அழிப்பதற்காக உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள்.

டாக்டர் டேவிட் ஜொன்சன் பேக்கிற்கு இந்தவீண் விரயம் அவரது மனச்சாட்சியைக் குத்துவது போலிருந்தது. எனவே அவர் தனக்கு வரும் மாதிரி மருந்துகளைச் சேகரித்து மிஷனரிமாருக்கு அனுப்ப ஆரம்பித்தார். டாக்டர் ஜொன்சன்பேக் செய்யும் தர்மப்பணி மற்றைய டாக்டர்களுக்குத் தெரியவரவே, அவர்களும் தமக்கு வரும் மாதிரிகளை இந்த டாக்டருக்கு அனுப்பத் தொடங்கினர். சிறிது காலத்தில் பிரிட்டன் முழுவதிலுமிருந்து மாதிரி மருந்துகள் வந்து குவியத்தொடங்கின.

தனிநபர் ஒருவரால் செய்ய முடியாது என்ற அளவிற்கு இப்பணி பிரமாண்டமானதாக மாறவே, டாக்டர் ஜொன்சன்பேக். 'வறுமைக்கெதிரான போர்' என்ற பிரிட்டிஷ் தொண்டர் சபையை உதவிக்கு அழைத்தார். இந்தச் சபை இம்மாதிரி மருந்துகளை தூர தேசங்களிலும், காங்கோ மலைப்பிராந்தியங்களிலும், அபிவிருத்தி அடையும் நாடுகளில் உள்ள போக்குவரத்துத் தொடர்பற்ற பிரதேசங்களிலும் மருந்து இடையாமல் தவிக்கும் வைத்திய சாலைகளுக்கு இடைக்கிடை தக்கதாக இப்போது அனுப்பி வருகிறது.

இம்மருந்து சேகரிக்கும் வேலையில் டாக்டர் ஜொன்சன் பேக்கிற்கு 23 பேர் உதவி செய்கிறார்கள். ஒவ்வொராண்டும் 40,000 பவுண் பெறுமதியான மருந்துகளை அவர்கள் சேகரிக்கிறார்கள் என்று பி பி ஸி கூறியுள்ளது. "பிரிட்டனின் மிகப் பெரிய டிஸ்பென்சரியை நடத்துபவன் நான் தான் என்று மார் தட்டிக்கொள்ள ...... முடியும்" என்று ........ டாக்டர் ........

## அடுத்தாண்டிலிருந்து

# திரைப்பட இறக்குமதி கூட்டுத்தாபனத்திடம்

கொழும்பு, சனி

தனியார் அடுத்தாண்டிலிருந்து திரைப்படங்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யமுடியாது. இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனமே அடுத்த வருடம் முதல் வெளிநாடுகளிலிருந்து திரைப் படங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கவுள்ளது.

திரைப்படக் கூட்டுத்தாபன மசோதா நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் சிங்கள தமிழ் திரைப்பட உற்பத்திக்கு இத்திரைப்படக் கூட்டுத்தாபனம் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் செயல்படும்.

# 10 ஆயிரம் தபால் உறைகள் அட்டைகள்

## நாவலர் சபை வெளியிடும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைக் கௌரவிக்குமுகமாக அரசாங்கம் நினைவு முத்திரையொன்றை இம்மாதம் 29-ம் திகதி வெளியிடுவதை முன்னிட்டு ஆறுமுகநாவலர் சபை 10 ஆயிரம் அழகிய தபாலட்டைகளையும் விமானத் தபாலுறைகளையும் வெளியிடவிருக்கிறது. நாவலர் நினைவு முத்திரையை ஒட்டி அனுப்பக்கூடிய வகையில் இந்தத் தபாலட்டைகளையும் விமானத் தபாலுறைகளையும் நாவலர் பெருமானின் உருவப்படத்துடன் நாவலர்சபை அழகாகத் தயாரித்துள்ளது. இம்மாதம் 27ம் திகதி இவை இரண்டும் வெளியிட்டு வைக்கப்படும். இந்த தபாலட்டைகளும் விமானத் தபாலுறைகளும் ரகுநாதன் பதிப்பகத்திலும் நாவலர் நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இம்மாதம் 29ம் திகதி நினைவு முத்திரை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைப்பதையடுத்து நாவலர் சபையின் விசேஷ மலர் வெளியீட்டுவிழா நாவலர் சபைத் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி சர் வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

# யாழ். தொழில் நுட்பக் கல்லூரி ஜனவரியில் தரம் உயரும்?

(நமது நிருபர்)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி ஜனவரி முதல் தரம் உயர்த்தப்படவிருப்பதாக, கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் முகமது, யாழ்ப்பாணமேயர் அல்பிரட் துரையப்பாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனவரிமுதல் இக்கல்லூரி பல்தொழில் நுட்பக்கல்லூரியாக இயங்கும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் "பொலிரெக்னிக்" ஒன்று நிறுவும்படி மேயர் விடுத்த வேண்டுகோளுக்கே, கல்வி மந்திரி இவ்வாறு பதிலளித்துள்ளார்.

5 பெரியார்களின்

# தபால் தலைகள் வெளியீட்டு ஒழுங்குகள்

கொழும்பு, ஞாயிறு

இம்மாதம் 29-ம் திகதி காலை நாட்டின் தலைசிறந்த 5 பெரியார்களைக் கௌரவிக்குமுகமாக 5 தபால் தலைகள் வெளியிடப்படவுள்ளன.

இத்தபால் தலைகள் ஐந்தும் எவ்வெவ்விடங்களில் யார் யாரால் வெளியிடப்படும் என்பது குறித்தும் இதையொட்டிய கூட்டங்கள் பற்றியும் தகவல் இலாகா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குமாரதுங்க முனிதாசா, ஆனந்த ராஜகருணா, வண. எஸ். மஹிந்தா, ஆனந்த குமாரசாமி, ஆறுமுகநாவலர் ஆகிய ஐந்து பெரியார்களது தபால் தலைகளையும் முறையே டிக்வெல தபாற்கந்தோரில் தேசிய நூதன ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ரோனி டி மெல், மாதம்பை தபாற்கந்தோரில் ரத்கம ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. எம். ஜி. மெண்டிஸ், பண்டாரகம ஸ்ரீசுதர்மாராமய பௌத்த கோவில் வளவிலுள்ள தபாற்கந்தோரில் பண்டாரகம ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ஹெர்பேர்ட் விக்கிரமசிங்க ஆகியோர் வெளியீட்டை ஆரம்பித்து வைப்பார்கள்.

மானிப்பாய் தபாற்கந்தோரில் உடுவில் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. வி. தர்மலிங்கத்தைப் பிரதம அதிதியாகக்கொண்டு கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி முத்திரை வெளியீட்டு விழா நடைபெறும். நல்லூரில் ஆறுமுகநாவலர் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தை அடுத்துள்ள தற்காலிக தபாற் கந்தோரில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. அருளம்பலத்தைப் பிரதம அதிதியாகக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ நாவலர் முத்திரை வெளியீட்டுவிழா நடைபெறும்.

இவ்வெளியீட்டையொட்டி அன்றைய தினம் மாலை 4 மணிக்கு கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலக தலைமையில் கொழும்பு கலாபவனத்தில் பொதுக்கூட்டமும் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

'ஆசிரியர் சேவை

### பாடசாலைக்கு வெளியேயும் பயன்படவேண்டும்'

பருத்தித்துறை, ஞாயிறு

"ஆசிரியர்கள் சமூகத்தின் பிரிக்கமுடியாத ஓர் உறுப்பாக விளங்குவதால், அவர்களுடைய சேவை பாடசாலைச் சுவர்களையும் தாண்டி சமூகத்திற்கும் பயன்படவேண்டும். அவ்வித ஆசிரியரின் சேவையே இன்று நாட்டிற்குத் தேவை. முக்கியமாக விஞ்ஞான அறிவு வளர்ச்சியடையும் இன்றைய நிலையில் சமூகத்திலுள்ள மாணவரல்லாதவர்களுக்கும் இவ்வறிவு கிடைக்கச் செய்ய வேண்டும்" இவ்வாறு, நீரியல் உயிரியல் ஆராய்ச்சி சபையின் உறுப்பினராகக் கடமையாற்றி, பதவி உயர்வுடன் இடமாறிச் சென்றிருவாளர்கள் பி. சபாரத்தினம், பி. கணேசமூர்த்தி, வி. இராசநாயகம் ஆகியோருக்கு தொண்டைமானாறு விஞ்ஞான வெளிவேலை ஆராய்ச்சி மண்டபத்தில் அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசிய திரு. கே. எஸ். குகதாசன் கூறினார். வடமாநில விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எம். அற்புதநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. எஸ். சத்தியமூர்த்தியும் பேசினார்.

### பாதசாரிகள் கஷ்டம்

தாவடி, ஞாயிறு

மாரிமழை தொடங்கும் முன்னரே தாவடிப்பகுதியைச் சேர்ந்த அஞ்சலோம்படி ஒழுங்கை சகதிபடிந்த நிலைமையால் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கிறது.

கோடை காலத்திற் கூட சிறுமழை பெய்தவுடன் வெள்ளம் நிறைந்து போக்குவரத்துக்கு கஷ்டம் ஏற்படுகிறதென்றால் மாரி மழை பெய்தால் இவ்வொழுங்கையால் போக்குவரத்து செய்வதே மிகவும் கடினமாகும். மேற்படி ஒழுங்கையைச் செப்பனிடுவதற்காகப்பறித்துள்ள கற்குவியல்கள் பலமாதகாலமாக இடக்கின்றன. இவ்வொழுங்கையைச் சீர்படுத்துவதில் அக்கறை எடுக்காதபடியால் இவ்வொழுங்கையால் போக்குவரத்துச் செய்யும் பாதசாரிகள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

### சேமிப்பு புத்தகம் தாமதம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பகுதியிலுள்ள ஒருவர், தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியில் பணத்தைச் சேமிக்கப் பயன்படுத்தும் புத்தகம் முடிவடைந்ததால் புதிய ஒரு புத்தகத்தை எடுக்கும் பொருட்டு உபதபால் அதிபருக்கூடாக சேமிப்பு மா அதிபருக்குத் தனது பழைய புத்தகத்தை அனுப்பி மாதங்கள் இரண்டுக்கு மேலாகியும் புதிய புத்தகம் உரியவருக்கு இதுவரை கிடைக்கவில்லையாம். இதனால் இவர் தமது பணத்தைப் போடவோ அன்றி எடுக்கவோ முடியாமல் கஷ்டப்படுவதாகவும் எனவே பாஸ்புத்தகத்தை உடன் கிடைக்க வழிசெய்யுமாறும் தபால் தந்தி அமைச்சருக்கும் / ஏனைய அதிகாரிகட்கும் இவர் அறிவித்துள்ளார்.

### 'நாவன்மையால் நாட்டை ஆளலாம்'

சுழிபுரம், ஞாயிறு

"நாவன்மை மனிதனுக்குள்ள அரிய திறமை. உலகம்பூராவும் வாழும் திறமைமிக்க பேச்சாளர்கள் தமக்கென ஓர் தனித்தன்மையைக்கொண்டவர்களாகவே திகழ்கின்றார்கள். அமரர்களான திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவும், அறிஞர் அண்ணாவும் தமது பேச்சுத்திறத்தால் ஆட்சியைக் கைப்பற்றினர்"

இவ்வாறு பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினரின் சொற்பயிற்சி வகுப்பை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய திரு அ அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

பண்ணாகம் ஐக்கியநாணய சங்க மண்டபத்தில் பண்டிதர் ம இராசஜகுரு தலைமையில் நடைபெற்ற இவ்வகுப்பில் பெருந்தொகையான வாலிபர்கள் பங்குகொண்டார்கள்.

### புராணபடனம்

தாவடி, ஞாயிறு

தாவடி ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில், சைவ இளைஞர் மன்றத்தின் சார்பில் கந்தபுராணம் படிக்கப்பட்டுவருகிறது. தினமும் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இப்புராணபடனத்தில், இளைப்பாறிய வங்கிப் பிரதம லிகிதர் திரு த சின்னத்துரை, திரு சபா கணநாயகம், திரு சி செல்லத்துரை ஆகியோர் கலந்துபாராயணம் செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் ஓர் அங்கம். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு கடமையுண்டு. கடமையைச் சரிவரச் செய்யுங்கள். உரிமை தானாகக் கிடைக்கும். இது சத்தியயுகம்,

— சுவாமி சாந்தானந்தா.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண வருடம் விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 8-ந் திகதி (25-10-71)

# சித்த வைத்தியக் கல்லூரி

டாக்டர் இன்னாசித்தம்பி அவர்களின் தலைமையிலே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கை சித்த வைத்திய சங்கத்தின் நாற்பதாவது ஆண்டுவிழாவில், இங்கு ஒரு சித்தவைத்தியக் கல்லூரியை கூடிய சீக்கிரத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்ற முக்கிய யோசனை வற்புறுத்தப்பட்டது. இவ்விழாவுக்காக் கொழும்பிலிருந்து வந்திருந்த ஆயுர்வேத வைத்திய சபையைச் சேர்ந்த டாக்டர் சந்திரசேனவும், அவரது சகாக்களும் இந்த யோசனையை ஆதரித்ததுடன், அரசாங்கத்தின் ஆதரவும் பூரணமாக இருப்பதாகவும், ஆயுர்வேதத்துக்கு அளிக்கும் ஆதரவைப்போலவே சித்த வைத்தியத்துக்கும் வேற்றுமை காட்டாமல் அரசாங்கம் அளிக்கக்காத்துள்ளதென்றும் தெரிவித்தனர். இது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

கைதடியிலே ஓர் அரசினர் சித்த வைத்தியசாலையை வருகிற ஜனவரி மாதத்தில் திறக்க இருக்கின்றனர். வைத்தியசாலை இயங்க ஆரம்பித்த பின், சித்தவைத்தியக் கல்லூரியும் திறக்கப்படுமென்று தெரிகிறது. சித்த வைத்தியத்தில் தமிழ்ப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு அதிக நம்பிக்கையுண்டு. ஆகவே சித்த வைத்தியத்துக்காக ஒரு தனிக் கல்லூரியை ஆரம்பிப்பதால், அந்த வைத்தியம் அபிவிருத்தி அடையவும், புதிய ஆராய்ச்சிகள் நடைபெறவும் முடியுமாக இருக்கவேண்டும். சித்தவைத்திய முறை பற்றி பதினெண் சித்தர்களின் வாக்கியங்களெல்லாம் தமிழிலேயே உள்ளன. ஆகவே இக்கல்லூரியில் சேரும் மாணவ. மாணவிகள் கட்டாயமாக சமஸ்கிருதம் படிக்கவேண்டுமென்ற கட்டாயம் தேவையில்லை. இதுபற்றி ஏற்கனவே இப் பத்திகளில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் இதுவரை கிடைக்காததுடன், வளர்ச்சிக்கான வாய்ப்புமில்லாதிருக்கிறது. அரசாங்கம் இக்கல்லூரிக்கு அங்கீகாரம் அளிப்பதுடன், பெரிய அளவில் கட்டடங்கள் முதலிய நவீன வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். இதே சமயம், கொழும்பிலே சித்தயூனானி வைத்தியம் பயில இப்போதிருந்து வரும் வாய்ப்பும் தொடர்ந்து இருக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் அதை மூடிவிடக்கூடாது. நாட்டுவைத்தியத்தின் மேன்மையை நன்குணர்ந்துள்ள அரசாங்கம் அதன் வளர்ச்சிக்கான எல்லா உதவிகளையும் ஆதரவையும் அளிக்குமென்றே நம்புவோம். இப்போதுள்ள ஆஸ்பத்திரிகளில் நோயாளர் கூட்டம் வரவர அதிகரித்துவருவதால், நாட்டு முறை வைத்தியக் கல்லூரிகளையும் வைத்தியசாலைகளையும் அதிகம் ஆரம்பிப்பதால், நோயாள பொதுமக்களுக்கு அது பலவகைகளிலும் கஷ்டநிவாரணமாக இருக்கும்.

## ஐ. நா. சபை

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 26 ஆண்டு விழாவை ஒட்டி கவர்னர் ஜெனரல் திரு கோபல்லவா அனுப்பியுள்ள ஒரு விசேட செய்தியில், உலக மக்களுக்கு அணுகுண்டு யுத்த ஆபத்து இன்னும் இருப்பதாகவும் மனித அடிப்படை உரிமைகளும் மறுக்கப்படுவதாகவும் சரியாகக் குறிப்பிட்டார்.

உலகில் யுத்தம் ஏற்படாமல் தவிர்க்கவும் அமைதியைப் பலப்படுத்தவும், மனித கௌரவத்தையும், உரிமைகளையும் பாதுகாக்கும் நோக்கத்துடனேயுமே இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை பல நெருக்கடிகளைக் குறைத்தும், சில நன்மைகளைச் செய்தும் வந்திருக்கிறதெனினும், ஐ. நா ஸ்தாபனம், அதன் மேலான நோக்கங்களை நிறைவேற்ற முடியாமல் உள்ளது. வல்லரசுகள் தனிப்பட்ட முறையில் யுத்த நடவடிக்கைகளை எடுக்காமல், ஐ. நா மூலமே உலக நெருக்கடிகளைத் தீர்ப்பதென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பின், இன்றைய அவலநிலைமை பெரிதும் நீங்கும்.

புதுச்சீனத்துக்கு இந்த உலக சபையில் இடம் அளிப்பதற்கான புதிய முயற்சிகள் நடப்பது வரவேற்கத்தக்கதாகும். அப் பெரிய நாட்டுக்கு இதுவரை இடமளிக்காதது பெரியகுறை. இக்குறை சீக்கிரத்தில் தீர்க்கப்பட இருப்பதால், அந்த ஸ்தாபனம் இனி பெரிதும் பலப்பட்டு அதன் நன்னோக்கங்களை நிறைவேற்றக் கூடியவாய்ப்பு முன்னையவிட அதிகமாக இருக்கும்.

இதேசமயம் இந்தியா-பாகிஸ்தான் யுத்த ஆபத்து ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன அப்படி எதுவும் ஏற்படாமல் தடுக்கவேண்டியது ஐ நாவைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டினதும் முக்கியகடமையாகும் இந்தக் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து, இந்தியா-பாகிஸ்தான் நெருக்கடியைத் தீர்க்க எல்லா நாடுகளும் முயற்சி எடுத்து, வெற்றிகரமாக அதைநிறைவேற்றுவதின் மூலம்தான் ஐக்கியநாடு ஸ்தாபனத்தின் மேலான நோக்கத்தைப் பூர்த்திசெய்யவும், அதன் மீது மக்களுக்கு உண்மையில் நம்பிக்கை ஏற்படவும் முடியும்.

# ஈழத்துக்கு பிஜித்தீவு வேண்டுகோள்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான்சுவாமிகளை பிஜித்தீவிலிருந்து தென் இந்திய கலாசார கழகத்தார் அங்கு வந்து சமயப்பணி செய்யுமாறு அழைப்பு அனுப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த அழைப்பை சுவாமிகள் ஏற்று வருகிற ஜனவரி மாதம் அங்கு புறப்பட்டுச் செல்லலாமென்றும், வழியில் சிங்கப்பூர். மலேசியா. பாலித்தீவு, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் தங்கி சமயப்பணி புரியலாமென்றும் தெரிகிறது.

இங்கிருந்து பிஜித்தீவு எவ்வளவுதூரம் தெரியுமா? 4000 மைல்களுக்கு மேலுள்ளதாம். அங்குள்ள தென்

**ஐயரான் எழுதுவது**

னிந்திய கலாசார கழகத்தார் சைவ சமய, சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதன்காரியதரிசியான திரு நவநீதகிருஷ்ண நாயுடு இவ் விஷயத்தில் பெரும் ஆர்வம்கொண்டு, சுவாமிகள் வருகைக்கு வேண்டிய ஒழுங்குசெய்ய முன்வந்திருக்கிறார்.

கொழும்பிலுள்ள அகில இலங்கை இந்து இளைஞர் சங்கப் பேரவையின் தலைமைச் செயலாளர் திரு க. சச்சிதானந்தன் கடந்த ஆனி ஆடி மாதங்களில் ஓர் அலுவலாக பசிபிக் கடற்பகுதியிலுள்ள பிஜித்தீவிற்குச்சென்றிருந்தார். பிஜித்தீவிலே ஏராளமான சைவத் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களாம். அவர்கள் நலம்பேணும் மன்றங்கள் சில அங்கு உண்டு. அவற்றில் ஒன்று தென்னிந்தியக் கலாசாரக் கழகம்.

பிஜித்தீவில் சமயப்பணி புரியத் தொண்டர் ஒருவரை அனுப்பி உதவுமாறு அக்கழக அலுவலர்கள் அவரிடம் கேட்டனர். திரு. சச்சிதானந்தன், தம்பிரான் சுவாமிகளைப்பற்றிக்கூறவே அவர்கள் உடன் ஏற்று அவரை வரவழைப்பதில் ஊக்கம் காட்டினர்; பிஜித்தீவில் வயலின் மிருதங்கம் போன்ற பக்கவாத்தியக் காரர்கள் இருப்பதாயும் தமிழ் இசைபயின்ற விற்பன்னர்களும் இருப்பதாகவும் தெரிகிறது.

தம்பிரான் சுவாமிகளின் வரவை பிஜித்தீவில் அக்கழகத்தார் மிக உற்சாகத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும், காரியதரிசி என். கே. நாயுடு, கொழும்பு கடற்றொழில் அலுவலகத்தில் பணிபுரியும் சச்சிதானந்தம் அவர்களுக்கு எழுதியுள்ள ஓர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அக்கழகத் தலைவரான ஸ்ரீ ஒய். பாஸ்கர ஐயர் இப்பொழுது துறவியாகி சுவாமி பாஸ்கர—ஆனந்தா என்ற பெயருடன், பிஜியிலே 'பா' என்னுமிடத்திலுள்ள சீதா ஆசிரமத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

அங்கு பெண்கள் சங்கங்களும் உள்ளன. தமிழ் மொழியை அம்மக்கள் மறவாமல் இருக்க பெருமுயற்சி செய்யப்படுகின்றது. பஜனைப்புத்தகங்களை அச்சிட்டுப் பரப்பவும் ஆவன்செய்துள்ளனர். தாயகத்தை விட்டு நாலாயிரம் மைல் தூரத்திலிருப்பினும் தமிழர் தங்கள் மொழியையும், கலையையும் மறவாமல். அதைப் பேணி வளர்க்க முற்படுவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

தம்பிரான் சுவாமிகள் அங்குமட்டுமல்ல. உலகில் தமிழர்வாழும் இடங்களுக்கெல்லாம் சென்று, சைவத்தையும், தமிழையும் பரப்ப திருவருள் காட்டவேண்டும். நாவலர் பெருமான் ஆரம்பித்த பெரும்பணி தொடர்ந்து நடக்கவும், ஈழத்தின் புகழ் உலகெல்லாம் பரவவும் இறைவன் அருள்செய்வாராக.

0 0 0

வண்டுசெய்த பழவினை
யின் பயன்
கண்டும் கண்டும் களித்தி
காண் நெஞ்சமே
வண்டுபாமலர்ச் செஞ்
சடை யேகம்பன்
தொண்டனாய்த் திரியாய்
துயர் தீரவே.

—அப்பர்சுவாமிகள்

[நெஞ்சமே! நீ முற்பிறவிகளில் செய்த பழவினைகளின் பயனைக் கண்டும் கண்டும், பின்னும் களிப்புற்றுக் கெடுகின்றனையே, வண்டு உலாவுகின்ற மலரை அணிந்த செஞ்சடை உடையவனாகிய திருவேகம்பத்துப்பெருமானுக்கு தொண்டனாகி உன் துயர்கள் தீரும்பொருட்டுத் திரிவாயாக.]

# சிங்கள, தமிழ் . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிழைகளை அவருக்குச் சுட்டிக்காட்டினோம். சட்டத்தில், நாங்கள் செய்யும் பிழைகளை எழுத்தில் கொடுப்பது பாரதூரமானதாகும் இங்குள்ள ஒரு ஆசிரியர் பழிவாங்கப்பட்டால் தென்னிலங்கையில் உள்ள ஆசிரியர்கள் எல்லாரும் அதை எதிர்த்து நிற்பார்கள் ஸ்ரீ லங்கா ஜாதிக குருசங்க ஆசிரியர்களில் எவரிலாவது நடவடிக்கை எடுத்தால், அது கஷ்டத்தில்தான் போய்முடிமுடியும்.

வடக்கிற்கு ஒருசுற்றுநிருபம் தெற்கிற்கு ஒரு சுற்றுநிருபம் என்பதை நாம் ஒத்துக்கொள்ள மாட்டோம் வடக்கென்றாலும்சரி தெற்கென்றாலும் சரி கல்வி முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு கொடுப்பது அவசியம்

சில நேரம் மந்திரிசபையே இதனை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். எமது சங்கத்தில் 92,000 ஆசிரியர்கள் இருக்கிறார்கள் 65ம் ஆண்டுமுதல் 70ம் ஆண்டுவரை எமது சங்கம் அரசாங்கத்தை எதிர்த்து வந்தது. இதனால் 121 ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் மரணமடைந்தனர், 6 860 பேர் கஷ்டப்பட்ட பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அப்படியிருந்தும் நாங்கள் அரசாங்கத்தின் தயவைநாடிப் போகவில்லை. கடந்ததேர்தலில் அவர்கள் தோற்றனர். எமது சங்கம் வென்றது.

கேள்விக்கொத்து ஒரு சிறு பிரச்னை. பெரிதாக இதனை எடுக்கக்கூடாது. வடமாநிலக் கல்வி அதிபர் என் நண்பர் என் அன்புக்குரியவர். இதுபற்றி விரைவில் அவருடன் கதைப்பேன், இதுபற்றி இன்னும் கல்விமந்திரியை சந்திக்கவில்லை. இதற்குப் பின்னும் ஒரு பட்டம் இருக்கிறது மந்திரியை சந்திக்கும்போது அப்பட்டத்தை பெருப்பித்துக் காட்டுவேன் அத்துடன் அப்பிரச்னை தீர்ந்துவிடும்.

கேள்விக்கொத்தை ஒருவரும் அனுப்புவதில்லை என முடிவு எடுத்தால் சங்கம் அதற்காக கடைசிவரை போராடும்.

விரைவில் யாழ்ப்பாணத்தில் எங்கள் சங்க மகாநாடு நடைபெறவிருக்கிறது தென்னிலங்கையிலிருந்து 1000 பேர் வருவார்கள் அவசரகால நிலைமைகாரணமாக ஊர்வலம்நடத்த முடியாது ஊர்வலம் நடக்கும் நிலைமையிருந்தால், அதன்பின் கேள்விக்கொத்து பிரச்னை இருக்காது.

அரசியல்வாதிகளை நீங்கள் நம்பக்கூடாது எந்தப்பிரச்னையையும் தொழிற்சங்கம் மூலமே தீர்க்கவேண்டும் உங்கள் பிரச்னைகளை சங்கம் மூலம் அனுப்பினால் அதை செய்யமுடியும் எம்பிக்கள் தயவை நாடினால் அது நடவாது அரசியல்வாதிகள் ஆசிரியர்களை தங்கள் கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள் ஆதலால் ஆசிரியர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்

நாங்கள் ஒன்றுசேர்ந்து கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும்.

## விதை நெல் வசதி

யாழ்ப்பாணம், திங்கள் பலரக விதை நெல்லை அரசாங்கம் கிளிநொச்சி விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது இவ்விவசாயிகளுக்கு உரப்பசளையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

புதிய ரக விதைநெல்லை அரசாங்க கமத்தொழில் பகுதியினர் பண்ணையில் நாற்றுப் பயிருக்குப் பரீட்சார்த்தமாக விதைத்துள்ளார்கள். (குவிம)

## பாடசாலைகள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் உதவுவதாக அமையும்.

இச்சங்கத்தின் தலைவர் பதவியை பாடசாலை அதிபரே வகிப்பார். பொருளாளர் பதவியை அப்பாடசாலையின் விவசாய போதனாசிரியர் வகிப்பார். உபதலைவர் செயலாளர் பதவிகளை அப்பாடசாலைமாணவர்கள் வகிப்பர்.

பாடசாலைகளில் ஆறும் வகுப்புக்குமேற்பட்ட எல்லா மாணவர்களும் இந்தக்குழுக்களின் உறுப்பினர்களாக இருக்கமுடியும் என்று தெரிகின்றது.

## வெற்றுச் சாக்கு விற்பனைக்கு

வலி-கிழக்கு வடபகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில், வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் 10-11-71-ம் திகதிக்குமுன் பதிவுத் தபால் மூலம், பொதுமுகாமையாளர், வலி-கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

ப. குகதாசன்,
பொதுமுகாமையாளர்
வலி-கிழக்கு வடபகுதி
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
அச்சுவேலி.

2672

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org